மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் வெளிநடப்புச் செய்யலாமா வேண்டாமா என்பது வேறு பிரச்சினை. ஆனால் அவர்கள் போனது ரொம்ப முறையானது என்பதுதான் அவையினுடைய தீர்ப்பு.

It is in perfect order.

5. அமைச்சரின் விளக்கவுரை.

சென்னை மாநகராட்சி நிலைக் குழுக்களுக்கான தேர்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதிகளின் 32-வது விதியின்கீழ் மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியை ஆறு நிலைக் குழுக்களின் மூலம் நிர்வகிப்பதற்காக, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் அண்மையில் திருத்தப்பட்டது. ஒவ்வொரு நிலைக் குழுவிலும் 11 உறுப்பினர்கள் இருப்பர். மாநகராட்சி உறுப்பினர்களிலிருந்து பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் இந்த நிலைக் குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இத்திருத்த மசோதாவில் வகை செய்யப்பட்டது. இந்த மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோது, விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை பின்பற்றுவது உகந்ததாக இருக்கும் என உறுப்பினர்களில் சிலர் கருத்துத் தெரிவித்தனர். பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கும் முறை குறித்த விதித்துறைகளை நீக்க அதிகாரப்பூர்வமான திருத்தம் கொடுக்கப்பட்டது. அரசு வரையறுக்கக் கூடிய முறையில் தேர்தல் நடத்துவதற்கு வகை செய்யப்பட்டது. நிலைக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகளை இயற்றும்போது ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநித்துவ முறை பின்பற்றப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிணங்க, ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறைக்கு வகை செய்யக்கூடிய வரைவு விதிகள் இயற்றப்பட்டு வெளியிடப்பட்டன. 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 348 (ஏ) பிரிவிலுள்ள விதித்துறையின்கீழ் இது குறித்து சென்னை மாநகராட்சியின் கருத்துக்கள் கேட்கப்பட்டன. மாநகராட்சி மன்றம் 11—10—1971 நாளிட்ட 709/71 எண் தீர்மானத்தில், விகிதாச்சார பிரதிநிதித்துவ முறைக்குப் பதிலாக பெரும்பான்மை வாக்களிப்பு முறையைப் பின்பற்றவேண்டுமென அரசிடம் வேண்டுகோள் விடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. விவாதங்களின் அடிப்படையிலும் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளின் அடிப்படையிலும் இதுகுறித்து ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டது. பெரும்பான்மை வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கும் முறை, 1961-ஆம் ஆண்டிற்கு முன்பு செயல்பட ஆரம்பித்த சென்னை மாநகராட்சி நிலைக்குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்

1971 டிசம்பர் 4]

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

பதற்குப் பின்பற்றப்பட்டது. பெரும்பான்மை வாக்களிப்பு முறை, எல்லா நகராட்சிகளாலும் மதுரை மாநகராட்சியாலும் பின்பற்றப் படுகிறது. எனவே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டி லும் இந்த முறையிலிருந்து மாறுபட்ட ஒரு முறை பின்பற்றப் படுவதை சென்னை மாநகராட்சி மன்றம் வரவேற்கவில்லை. பொது நிர்வாகத்திற்காகவும், நிலைக்குழுக்கள் செம்மையாக செயல்பட வகை செய்வதற்காகவும், மாநகராட்சி நிர்வாகத்தின் பொறுப்பேற்று நடத்தும் சென்னை மாநகராட்சி மன்றம் போன்ற முக்கியமான நிறுவனத்தின் கருத்துக்களைப் புறக்கணிக்க இயலா தென அரசு முடிவுசெய்தது.

எனவே, பெரும்பான்மை முறையைப் பின்பற்றலாம் என்று மாநகராட்சி மன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதென்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 348--வது பிரிவின்கீழ் இந்த விதி சட்ட மன்றத்தின் முன்பு விரைவில் வைக்கப்படும். இந்த விதித்துறைகளின்கீழ், அந்த விதிகள் மாற்றியமைக்கப்பட வேண்டு மென்று இரண்டு அவைகளும் ஒப்புக்கொண்டால், இரண்டு அவை களாலும் ஒப்புக் கொண்டபடி திருத்தியமைக்கப்பட்ட படிவத்தில் மட்டுமே அவ்விதிகள் செயலுக்கு வரும்.

எனவே, இதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

Dr. H. V. HANDE: Sir, on a point of order. I am not going into the details of the matter now before the House. Sometime ago a Bill was brought before the House and there was a discussion on it and the Hon. Minister gave some assurances on the floor of the House. We have taken it for granted that these assurances would be implemented. Now the Hon. Minister has made a statement under rule 82 of the Assembly Rules. Will it not be proper that the matter should be discussed on some other occasion and then the Government should come to a decision.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைப் பொறுத்தவரையில் விவாதம் இல்லை என்றாலும் நான் பாயிண்ட் ஆஃப் ஆர்டராக எழுப்பிப் பேசுகிறேன். எற்கனவே இந்த மசோதா இங்கு வந்திருந்தபொழுது என் பெயரில்தான் திருத்தம் இருந்தது. இன்னொரு உறுப்பினர் பெயரி லும் அதே திருத்தம் இருந்தது. யாராவது இருவர் கொடுத்த திருத்தமும் ஒரேமாதிரியாக இருந்தால் ஒருவர் திருத்தமே போதும் என்ற முறையில் வந்தது. பிறகு அமைச்சரவையிலே கூடி திருத்தத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். கொடுத்த வாக்குறுதிப்படி இந்தக் கருத்தின் அடிப்படை, விதி முறையாக அமைக்கப்படும் என்றார்கள். ஆனால் இம்மாதிரி இன்றைக்கு 82-வது பிரிவின் கீழ் கொண்டு வந்து வைப்பது முறை அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்ப
12·30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அறிக்கை முறையாகத்தான் வந்திருக்கிறது. இந்த அவைக்கு உறுதி கொடுத்தது உண்மை, அதைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். இந்த அவைக்குத் தெரியாமல் மாற்றம் செய்ய விரும்பவில்லை. ஆகவே, காரண காரிய விளக்கங்களைச் சொல்லியிருக்கிறேன். அதற்கு விதிமுறைகள் வரப்போகின்றன. இரண்டையும் சேர்த்து வைத்து விவாதிக்க இடம் அளிக்க ஆயத்தமாக இருக்கிறது அரசு. அவை முடிவு எடுத்து அனுமதியளிக்க வேண்டும் என்பதைப் பேரவைத் தலைவரவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னது இந்தச் சட்டசபையிலே ஒரு முக்கியமான பிரச்னைதான். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடன்கூட விவாதித்திருக்கிறேன். ஒரு உறுப்பினர் ஒரு திருத்தம் கொடுக்கிறார், இன்னொரு உறுப்பினரும் அதேமாதிரியாக திருத்தம் கொண்டுவரும் நேரத்தில், சிலநேரங்களில் இரண்டும் ஒரேமாதிரியாக இருக்கின்றபொழுது ஒரு உறுப்பினரை மட்டும் முன்மொழியுமாறு சொல்கிறோம். ஆகவே, இன்னொருவருக்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அந்த உறுப்பினர் மனத்தை மாற்றிக்கொண்டு வற்புறுத்தாமல் விட்டுவிட்டால் அந்தக் கருத்தே கூட இடம் பெறாமல் போகிறது. இவைகளை நம்முடைய சட்ட மன்ற விதிமுறைகள் கமிட்டி ஆராயலாம். இந்த விவாதத்தைப் பொறுத்துக்கூட அல்ல, இரண்டு உறுப்பினர்களும் அமெண்ட்மெண்ட் கொடுக்கும் நேரத்தில் சபையில், முதலிலே கொடுத்த உறுப்பினருக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அதற்கு மாற்று யோசனைகளை ரூல்ஸ் கமிட்டி ஆராய உறுப்பினர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6. கவன ஈர்ப்பு

தில்லி அகில இந்திய வானொலியில் தமிழ்ச் செய்தி அறிக்கைக்கு அளிக்கப்பட்ட நேரம் குறைக்கப்பட்டதும், அதை மீண்டும் அதிகரிப்பதன் அவசியம் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு திரு. மலேச்சாமி அவர்கள் கொண்டு வருவார்கள்.

திரு. பெ. மலேச்சாமி : தலைவரவர்களே, "பல்லாண்டு காலமாக டில்லி, அகில இந்திய வானொலி நிலையத்தில் நாள் ஒன்றுக்கு (காலை, பிற்பகல், இரவு, ஆகிய நேரங்களில்) தமிழ்ச் செய்தி அறிக்கை நாற்பது நிமிடங்கள் படிக்கப்பெற்று வந்ததை அண்மைக் காலத்திலிருந்து முப்பது நிமிடங்களாகக் குறைக்கப் பெற்றுள்ளதால் தமிழக மக்களும், வேற்று நாடுகளில் வாழும் தமிழர்களும் இந்தியச் செய்திகளை முழுமையாகக் கேட்க வாய்ப் பில்லாத நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி பழைய